## திரு. ரெஜித்குமார் அவர்கள் அளித்த தகவல் (11-09-25)

நான் ஆழ்ந்த தியானத்தில் இருந்து சில ரகசிய தகவல்களை புரிந்து கொண்டேன். இந்த மாத இறுதியில் நான் பயணம் செய்ய உள்ளேன். முதலில் அர்மேனியா, பிறகு அடுத்த இடம்( அதைப் பிறகு தெரியப்படுத்துகிறேன்).

நான் தாய்வானிற்கு பயணம் செய்ய இருக்கிறேன். ஏனென்றால் அது முருகப்பெருமானின் நான்காவது படைவீடாக எனக்கு முருகப்பெருமானால் வெளிப்படுத்தப்பட்டது. முதல் மூன்று அறுபடை வீடுகள் சுமார் ஆறு வருடங்களுக்கு முன்பு **2019-ல்** வெளிப்படுத்தப்பட்டது. அவை ப்ளூ மௌண்டைன் ( ஆஸ்திரேலியா), ரீயூனியன் தீவு மற்றும் உஜ்ஜெயின்( இந்தியா) பகுதிகளில் உள்ளது. முருகப்பெருமான் வெளிப்படுத்திய படி, நான்காவது அறுபடை வீடு தாய்வான் உடைய தலைநகரமான தாய்பெய்-க்கு அருகில் கடலுக்கு அடியில் உள்ளது. நான் அப்பகுதிக்கு தான் பூஜை செய்வதற்காக பயணம் செய்யப் போகிறேன். மற்ற இரு அறுபடை வீடுகளைப் பற்றி இதுவரை எனக்கு தெரியப்படுத்தப்படவில்லை. அவையும் கடலுக்குள் இருக்க வாய்ப்புள்ளன.

முருகப்பெருமானின் ஆசியுடன், அவரின் வழிகாட்டுதலின்படி, கடமையாற்றிய பிறகு, இந்தியாவில் பல நேர்மறை மாறுதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக சோழ யாகத்திற்குப் பிறகு செங்கோல் பிரதிஷ்டை இந்திய நாடாளுமன்றம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. 15-08-23 - இல் பழனியில் நாம் நடத்திய யிங்-யாங் யாகம் புதிய உலக ஒழுங்கு வரிசை (இந்தியா- சீனா- ரஷ்யா) நாடுகளுக்கிடையே அமல்படுத்துவதற்காக நடத்தப்பட்டது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு, தற்பொழுது புதிய உலக ஒழுங்கு வரிசை (New World Order) இந்தியா,சீனா மற்றும் ரஷ்யா நாடுகளுக்கிடையே நடைமுறை படுத்தப்பட்டு உள்ளது. இரண்டு வருடங்களில் இது நிஜமாகி விட்டது.

**LMRK** இயக்கத்தை பற்றி பல மக்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள், குறிப்பாக மலையாளம் தொலைக்காட்சி நிலையங்கள் முருகப்பெருமானின் வழிகாட்டுதலுடன், LMRK ஆற்றிய கடமைகள் எவ்வாறு உலகத்தில் ஒரு நேர்மறை மாறுதல்களை கொண்டு வந்திருக்கின்றன என்பதை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றன. நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகள் இதைப் பற்றி தான் தற்பொழுது பேசிக் கொண்டிருக்கின்றன.

**2023**-இல் யாகம் முடிந்த பிறகு, முருகப் பெருமானின் வழிகாட்டுதலுடன், இந்தியா- சீனா எல்லைக்கு அருகில் பல பகுதிகளுக்கு நான் பிரார்த்தனை செய்வதற்காக பயணம் செய்தேன். அவை i) என் பிறந்தநாள் அன்று **(29-03-24)** தர்மஸ்தலா( இமாச்சலப் பிரதேசம் ) ii). கேங்டாக் ( சிக்கிம்), iii). ஸ்பிடி வெலி ( இமாச்சலப் பிரதேசம்) மற்றும் iv) என் பிறந்தநாள் அன்று **(29-03-25)** தவாங் ( அருணாச்சலப் பிரதேசம்). முருகப்பெருமானின் ஆசியுடன் இந்த கடமைகளை ஆற்றிய பிறகு, பல புவிசார் மாற்றங்களை உலகத்தில் நாம் பார்க்க தொடங்கி விட்டோம்.

நான் இப்பொழுது பயணம் மேற்கொள்ளப் போகின்ற பகுதி தாய்வானிற்கு அடுத்து உள்ளது. அடுத்ததாக, அர்மனியாவில் உள்ள யாசிதி கோவில் ஆகும். யாசிதிகள், குமரிக்கண்டத்துடன் தொடர்புடைய மக்கள் ஆவார்கள். அவர்கள் முருகப்பெருமானின் வாகனம் மயிலை தெய்வமாக வழிபடக் கூடியவர்கள். யாசிதிகள் தங்களுக்காக '**கார்த்கிஸ்தான்**' என்று அழைக்கப்படும் சொந்த நாட்டை உருவாக்கும் முயற்சியில் உள்ளதாக அண்மை செய்தியில் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான் அவர்களை அக்னியாகத்திற்கு அழைப்பதற்கு விருப்பப்படுகிறேன். நான் யாசிதி கோவிலுக்கு சென்று அங்கு பிரார்த்திக்க யோசித்துக் கொண்டிருக்கிறேன். இது முருகப்பெருமானின் உதவியுடன் அந்த ஆற்றல்களுடன் இணைவதற்காகவே ஆகும். நான் மற்றொரு இடத்திற்கு பயணம் செய்ய இருக்கிறேன். அவ்விடம் தங்கள் அனைவருக்கும் பிறகு தெரியப்படுத்தப்படும். இந்த மாத இறுதியில் நான் அவ்விடத்திற்கு பயணம் செல்ல இருக்கிறேன்.

### குருவாயூரில் மயூரம் 2.0 நிகழ்ச்சி (12-10-25) (சஷ்டி, ஞாயிற்றுக்கிழமை)

- மந்திர தீட்சை மற்றும் ஆற்றல் பரிமாற்றம்
    - குழந்தைகள் மந்திர தீட்சை பெற
    - முருகப்பெருமானின் ஆசியுடன் இளைஞர்கள் ஆற்றல் பெற( இது அவர்களை போதை மருந்து முதலிய பல தீய பழக்கங்களில் இருந்து காக்கும்)
- முருக பூஜை
- ஒளி உடல் செயல்படுத்தும் தியானம் (Light Body Activation)
- கந்தலோக தியானம்

### கந்தலோக தியானம்

நான் ஒரு சிறப்பு தியானத்தை நடத்தப் போகிறேன்- அது ஒரு ஆச்சரியம். இது நம் அனைவரையும் கந்த லோகத்துடன் தொடர்பு படுத்தும். நான் உங்கள் அனைவரையும் கந்தலோகத்துடன் தொடர்பு படுத்தப் போகிறேன். இது முதல்முறையாக குருவாயூரில்
**12-10-25** அன்று 15 நிமிடம் நடத்தப்பட உள்ளது. நேரில் வர இயலுபவர்கள் நேரடியாக வரலாம். மற்றவர்கள் இணைய வழியில் கலந்து கொள்ளலாம். இது மறுபடியும் மாதம் ஒரு முறை, ஞாயிற்றுக்கிழமையில் 10.00 AM முதல் 10.15 AM வரை நடத்தப்படும்.

ஒளி உடல் செயல்படுத்துதல் நிகழ்வின் போது, ஒரு ஆனந்த உணர்வு நமக்குள் ஏற்படுவதை உணரலாம். ஆனாலும் நம்மை கந்தலோகத்துடன் தொடர்பு படுத்தக்கூடிய இந்த தியானம், ஒரு முழுவதும் வித்தியாசமான அனுபவமாக இருக்கும். நாம் பெறக்கூடிய இந்த ஆற்றல்கள், ஒருவர் ஆழ்கடலில் முத்து எடுப்பது போன்ற ஒரு அழுத்தத்தை அல்லது ஒருவர் பூமியில் இருந்து விண்வெளிக்கு செல்லும் போது ஏற்படக்கூடிய அதிக அழுத்தத்தைப் போன்று அல்லது ஒருவர் அண்டவெளி வோர்ம்ஹோலில் பயணம் செய்யும் போது உள்ள அனுபவத்தை போன்று இருக்கும். இந்த ஆற்றல்கள் நமக்கு மிகவும் பயன் தரக்கூடியதாக இருக்கும்.

நாம் அனைவரும் வாழ்நாள் முழுவதும் நேர்மையாக முருகப்பெருமானின் கடமைகளை ஆற்றுவோம் என்று முருகப்பெருமானின் காலடியில் சங்கல்பம் செய்து உறுதிமொழி ஏற்று அதன் பிறகே இந்த தியானத்தில் பங்கேற்க வேண்டும். அது நிதி (Finance)/ ஐ.டி (IT)/ தரைப்படை குழு (Ground Force Team) மூலமாக வேலை செய்யலாம். இந்த தியானம் அதிசிறப்பு வாய்ந்தது மற்றும் மிகவும் சக்தி மிக்கது. இந்த தியானத்தில் விருப்பமானவர்கள் மட்டும் அவசியமாக கலந்து கொள்ள வேண்டும். இது நாம் கந்தலோகத்துடன் ஒரு சக்தி மிக்க தொடர்பை பெற உதவும். இது அக்டோபர் 12, 2025 அன்று நடைபெற உள்ளது. ஆர்வம் மிக்கவர்கள் இதில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.
வணக்கம்.
அனைவருக்கும் முருகப்பெருமானின் ஆசிகள் கிடைக்கட்டும்!
ஜெய் பழனி ஆண்டவா! ஜெய் பாரதம்!

ஓம் சரவணபவாய நமஹ

மொழிபெயர்ப்பு: திருமதி. பிரீத்தி. ஜெ